REG No M 2997.

தனிப்பிரதி அணா. 1

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

LeRédacteur
S.CANDIAH PILLAI

# வித்தகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை

VOL. III | புதுவை, தாது ஹூ ஐப்பசி மீ கூ உ (22—10—36) | Nos 44,45.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

பத்தாபத்தர்களுக்கருள்செய்யும்பரம்பரனே
முத்தாமுக்கணனேமுதுகுன்றமமர்ந்தவனே
மைத்தாருந்தடங்கண் பரவையிவள்வாடாமே
யத்தாதந்தருளாயடியேனிட்டளங் கெடவே.

மங்கையோர்கூறமர்ந்தீர்மறைநான்கும்விரித்துகந்தீர்
திங்கள்சடைக்கணிந்தீர்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
கொங்கைநல்லாள்பரவைகுணங்கொண்டிருந்தாள்முகப்பே
யங்கணனேயருளாயடியேனிட்டளங்கெடவே.

# ஒருதுறைக் கோவை.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்.
வித்துவான் பிரம்மஸ்ரீ. சி. கணேசையர்
அவர்கள் எழுதியது.

---

(தொகுதி 3. -ம் 42வாரத் தொடர்ச்சி.)

[பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது]

இலையே தழைத்துக் கொழுங்கனல் பூத்திகல் காய்த்துவெய்ய
கொலையே பழுத்தசெவ் வேல்ரகு நாதனைக் கூடலர் போன்
மலையே யெனக்களித்தீர்கட லேறுகை வாய்த்து நின்றீர்
சிலையே படைத்த நுதலீர் திகைத்ததென் சிந்தனையே.

கடலேறுகை வாய்த்து நின்றீர்—கடல் போன்ற கண்ணி லேறிய கையைப் பொருந்தி நின்றீர். இனிக் கூடலர் போலக் கடலேறு தலைப் பொருந்தி நின்றீர் என்பதுந் தோன்றிற்று. அளித்தீர் — முற்றெச்சம். கூடலார் — பகைவர். தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்த வேல் என்க.

நெய்வாய்த் திகன்மன்னர் சோரியின் மூழ்கி நிணமருந்து
மைவாய்த்த வேற்படை யான்ரகு நாதன் மணவையன்னீர்
மெய்வாய்த்த கோல வனமுலை யார்தம்மை விட்டுவிளைக்
கைவாய்த்த மைவிழி யாருடன் சேர்தல் கடன்ல்லவே.

மெய் வாய்த்த கோல வனமுலையார் — மெய் போன்ற அழகிய சந்தனக் கோலத்தை யுடைய முலையை யுடையோர். என்றது கன்னியரை. மை விழியார் என்றது பெதும்பையரை.

செம்பேந்தி யமதில் வீரையர் கோன்முச் செகமனைத்து
நம்பேந்தி வாழ மனுமுறை யான்ரகு நாதன்வெற்பி
லம்பேந்தி நிற்பதுங் கண்டே னினியுன்ற னங்கையினுற்
கொம்பேந்தி நின்றென் னிடையூறு தீரக் குறிக்கொள்ளுமே.

கொம்பு — கோடு போன்ற தனம்; ஊது கொம்பு.

பாவுக் கிசையும் பெயரே புனைந்து மெய்ப் பாவலர்தந்
நாவுக் கிசையும் பெரும்புக ழான்ரகு நாதன்வரைக்
கோவுக் கிறையின் றளித்தீ ரெமக்குக் கொடுத்தவிரு
மாவுக் கிறையிலி செய்தீர் புகழும் வகையறிந்தே.

கோ — கண்; பசு. இறை—கை; திறை. மா—யானை போன்ற தனம்; யானை. இறையிலி — கையில் லாமை; திறையில் லாமை. பசுவுக்குத் திறைகொடுத்து யானைக்குத் திறையில்லாமற் செய்தீர் என்பதுந் தோன்றிற்று.

தாருஞ் சிலையும் கலவையும் பூணுந் தருந்தருவுங்
காரும் பொருவுகை யான்ரகு நாதன் கரந்தையன்னீர்
யாருந் துவண்ட மருங்குலு நானும் வருந்தலைநீர்
பாருங் கொடிது கொடிதுகண் டீரிப் பணைமுலையே.

சிலை — மணி. வார் — கச்சு. நும்முலைபால் வாரும் மருங்குலும் நானும் வருந்தலை நீர்பாரும். பாரும் — முன்னிலை வினைமுற்று.

கார்த்தலர் தோயுங் கொடிமதில் சூழுங் கரந்தையர்கோன்
பார்த்தலம் போற்றும் ரகுநாதன் வெற்பிற் பசுங்கதிர்ப்பூண்
சேர்த்தலங் காரித்த மின்னே யினிமைச் செந்தேனிங்ஙனே
கூர்த்தலங் கைத்தல மேவியவாறு கொடுமையின்றே.

செந்தேன் — செவ்வியவண்டு போலுங்கண். கூர்த்தலம்—மணிக்கட்டு. தேன்மேவிய வாறு கொடுமை என இயைக்க. இனிமையை யுடைய சிவந்த தேன் கையில் மேவியவாறு கொடுமை யில்லை என்பதுந் தோன்றிற்று.

மடற்கே தகைசுற்றும் தேவையர் கோன்வய மன்னர்க்கெல்லா
மடற்கே சரிதள வாய்ரகு நாத னணிவரையீர்
விடற்கே துணிவுற் றிருநாக மும்வெளி விட்டுவெங்சட்
கடற்கே திருநெடும் பூட்கைதந் தீரென்ன காரணமே.

நாகம்—யானை போன்ற முலை; ஆண் யானை. பூட்கை—பூணையுடைய கை; பெண் யானை. இனி ஆண் யானையை வெளியில் விட்டும் பெண் யானையைத் தந்தீர் என்பதுந் தோன்றிற்று.

மேவிய தூதின் மெலிவுரைத் தேயன்று மெய்த்தரும
னேவிய மேகம் ரகுநாதன் றேவையி லெண்டிசையுந்
தாவிய செங்கண் மடப்பிணைக் கேயிறை தாவவுயிர்
ஓவிய நீகொடுத் தாலென்செய் யாதிவ் வுலகினையே.

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய.
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.
[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை
தாது ௵ ஐப்பசி ௴ ௳ ௨

# திருக் குறள்

## முதற் குறள்.

### கடவுள் வாழ்த்து.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக் குறள் அதிசூஷ்மயமான வேத உண்மைகளை உலகோர் உணர்ந்து உய்யும்படி அவ்வுலகியலோடு ஒப்ப வைத்து விளக்கிக் கூறுவதோர் அரிய பெரிய செழுந் தமிழ் மறை என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையே ஆகும். இத் திரு மறையின் அருமை பெருமைகள் ஆடால கோபாலப் பிரசித்தம் என்பது மிகையன்று.

ஆதி சத்தியின் அவதாரம் எனப் போற்றப் பட்டவரும் அரிய பெரிய வேத சூக்தங்களை அருளிய தத்துவப் பெரியாருமாகிய ஔவையாரே திருவாசகம் முதலிய தெய்வ மறைகளோடு இதனை ஒப்புமைக் கூட்டமாக வைத்து இவை யாவும் "ஒரு வாசகம்" எனப் போற்றி யருளினார் என்றால்,

இத் தமிழ் வேதத்தின் அருமை பெருமையை ஒன்றும் போதா அறிவிலிகளாகிய எம் போலியர் என்னென்று உரைக்க முடியும்?

## ஔவையார் மூதுரை.

———

தேவர் குறளுந் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.

(ஷி வாக்குண்டாம்)

சைவர் வைஷ்ணவர் சமணர் பௌத்தர் கிறீஸ்துவர் என உலகில் உள்ள சமயிகள் பல்லோரும் தத்தமக்கே உரியது எனப் பொன்னே போற் போற்றிக் கொண்டாடும் பெற்றி வாய்ந்த தமிழ் மறை இதுவே என்பதும் அவ் வச்சமயிகள் கூற்றுக்களால் நன்று வலியுறுகின்றது.

இதனால், சீவர்கள் தற்சுதந்தரத்தால் கண்டு பிடிக்கப்பட்டு ஒவ்வோர் சாரார்க்கே உரிய கற்பனை நெறிகளாய் உலகில் வழங்கும் போலியான சமயக் கொள்கைகளைக் கூறாது எல்லாச் சமயத்தவர்க்கும் எல்லாச் சாதியாளர்க்கும் — சகல சீவ ராசிகளுக்கும் உரிய உண்மை நெறியாகிய சத்திய நெறியையே கூறியருளினார் பொய்யில் புலவராகிய எமது திருவள்ளுவர் என்பது வெள்ளிடை மலையாதல் கண்டு கொள்க.

## கல்லாடம்.

———

"சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்.............................."

என்னும் கல்லாடர் வாக்கும் இவ் உண்மையை நன்று வலியுறுத்துகின்றது.

இத்தகைய அரிய பெரிய தமிழ் வேதத்தில் பாயிரம் எனப் புகலப்படும் முதல் நான்கு அத்தியாயங்களுள் "கடவுள் வாழ்த்து" என்னும் முதலாம் அத்தியாயத்தில் முதலாம் சூக்தமாகி மிளிர்வது

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்னும் குறட்பா ஆகும்.

பிரபஞ்சத் தோற்றத்தை விளக்கு முகத்தால் அதற்கு முதற் காரணமாகிய "ஆதி" என்னும் சத்தியின் மாண்பு கூறி, உலக மாதாவாகிய அவளை வணங்கி வாழ்த்துதலின் இன்றியமையாமையை உணர்த்துதல் நுதலிற்று இச் சூக்தம் என்க.

இவ் அரிய பெரிய சூக்தத்தின் உண்மைப் பொருளை ஒரு சிறிது விளக்கிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இத் தமிழ் நாட்டில் இக் குறட்பாவை அறியாதார் மிகச் சிலர் எனவே கூற ஆம். இதற்கு உரை கண்டார் பலர். முன்னே இதற்கு உரை கண்டார் பதின்மர் என விளம்புகின்றது பின் வரும் செய்யுள்.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பரிதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கன் வள்ளு
[வர் நூற்
கெல்லை யுரையெழுதி னோர்."

இப் பதின்மருள்ளே நச்சர் எனப் பட்டவர் நச்சினார்க்கினியரே எனக் கொண்டு (அபிதான கோசம்) அவர் உரையும் பரிமேலழகர் உரையுமே சிறந்தன என்பர்.

இவற்றுள்ளும் பரிமேலழகர் உரையே சாலச் சிறந்தது எனப் பண்டும் இன்றும் உள்ள பாவலர்கள் நாவலர்கள் புலவர்கள் பண்டிதர்கள் யாவரும் சென்னியிற் கொண்டு போற்றுப.

மேலும் இத் தமிழ் வேதத்துக்கு உரை கண்டோரும் காண்கின்றோரும் பலர் எனவும் ஆம்.

இவ் உரையாசிரியர் எல்லாம் மேலே கூறிய குறட்பாவுக்குக் கண்ட உரைகள் சொற்களாலும் வாக்கியங்களாலும் வெவ்வேறாகக் காணப்படினும்,

எழுத்துக்கள்எல்லாம்அகரத்தைமுதலாக
[உடையன

அதுபோல,

உலகம்ஆதிபகவனைமுதலாகஉடையது

என்னும் பொருள் ஒன்றனையே யாவரும் ஒரே முகமாகக் கூறுகின்றனர் என்பது வெள்ளிடை. இவ்வாறன்றி, வேறு பொருள் கண்டார் உளரோ? யாம் அறியேம்.

எழுத்துக்களுக்கு முதல் (எழுத்து) அகரம் எனக் கூறுவது உண்மையே. பள்ளிக் கூடங்களில் படிக்கும் சிறார்களுக்கும் இஃது உடன்பாடே; எதிர் மறையன்று.

இஃதே போல், உலகம் ஆதி பகவனை முதலாக வுடையது என்று பொருள் உரைப்பதனால், மாழ்கல் ஆக்க முற்று உணர்ச்சி திரிகின்றது. காரணம் என்னை? எனின், கூறுதும்:—

உலகம் பகவனை முதலாக உடையது

என ஆசிரியர் கூறினர் எனின், மேலே கூறிய உரை சாலப் பொருத்த முடையதே ஆகும் என்பதில் ஐயப்பாடில்லை.

அவ்வாறின்றி,

"ஆதி பகவன் முதற்றே உலகு"

என ஆசிரியர் அருளியதன் காரணம் என்னையோ? எனச் சிந்திக்கற்பாலதும் இயற்கையே அன்றோ?

என்? ஆதி பகவன் என்புழி அநாதி பகவன் யாண்டுளன்? என்னும் சங்கை எழுகின்றதனால் என்க.

இதற்குச் சமாதானம் பரிமேலழகர் உரையில் பின் வருமாறு காணப்படுகின்றது.

அது,

"ஆதி பகவன் இருபெயரொட்டுப் பண்புத் தொகை வட நூன் முடிபு"

என்பது.

இலக்கண இலக்கியங்களில் வல்ல பட்டதாரிகள் இச் சமாதானத்தை ஒப்புக் கொள்ள ஆம்.

மற்றோ, நடுவு நிலைமை வகித்து ஒரு பாற் கோடாது உள்ளதை உள்ளவாறு கூறும் பெற்றி யுடையார் இக் கூற்றை ஒப்புக் கொள்ளார்.

என்? ஆக்கமுற்ற சங்கை இலக்கண இலக்கியம் — வடநூல் தென்னூல் என்பன வற்றைப் படித்ததனால் ஆய உணர்ச்சியின் வசப் பட்ட தன்று ஆதலால் என்க.

மற்றோ, நியாய வாயில் என்னும் அறிவு விளக்கத்தின்பாற் பட்டது என்பதே சாலப் பொருத்த முடைத்தாம் என்க.

நூலாசிரியர் சங்கப் புலவராலும் போற்றப் பட்டவர் என்பதும், தமது காலத்துக்குப் பின்னும் தற்காலத்தும் உள்ள புலவர் நாவலர் பாவலர் எனப் படுவோர் யாவரினும் மிகமிகச் சிறந்த மதிப் பொலிவுடையவர் என்பதும் எவராலும் மறுக்க முடியாதனவே ஆம்.

அற்றாக,

எழுத்துக்களுக்குஅகரம்முதல்
உலகத்துக்குப்பகவன்முதல்

எனக் கூறிவிட அறியாமல், எக் காரணமும் இன்றி, "வட நூன் முடிபு" எனப் பட்ட இரு பெயரொட்டுப் பண்புத் தொகையை (அஃதாவது இடத்துக்கு அவசியமில்லாததும் பல சங்கைகளுக்கும் வாதங்களுக்கும் இடந் தருவதுமாகிய

"ஆதி"

என்னும் சொல்லைப்

"பகவன்"

என்னும் சொல்லுக்கு முன்னர் வைத்து) ஆசிரியர் கையாள வேண்டியது எற்றிற்கோ? என்பதும் ஒரு சங்கை.

அல்ல. வேறு வகையாகக் கூறத் தெரியாதவரும் அல்லரே! ஆதலால்

"ஆதி"

என்னும் சொல்லைத் தமது திட்ப நுட்பம் செறிந்த திருக் குறளில் ஆசிரியர் அநாவசியகமாக வழங்கினர் என்று கூற ஆமோ? ஆம் எனின், அவர் தம் தெய்வப் புலமைக்கு இழுக்கு ஏற்படும் அல்லவா?

மற்றும் ஓர் சங்கை எழுகின்றது. அஃதாவது:—

அகரம் எழுத்துக்களுக்கு எல்லாம் முதல்
பகவன் உலகத்துக்கு முதல்

என்று கூறியதனால் இவ் ஆசிரியரைச் சங்கப் புலவரால் போற்றப் பட்ட மதிப் பொலிவுடையார் என விதந்து கூறுதல் எங்ஙனம்? என்பது.

சாதாரணமான படிப்புடையவருந் தான் "வட நூல்"களை — இலக்கண இலக்கியங்களைப் படிக்காத எம் போலிய புல்லறிவாளருந் தான்,

கரண்டி செய்கிறவன் கருமான்.
கலப்பை செய்கிறவன் தச்சன்.
நகை செய்கிறவன் தட்டான்.
சட்டி செய்கிறவன் குயவன்.
உலகத்தைப் படைத்தவன் கடவுள்.
எழுத்துக்களுக்கு முதல் அகரம்.
பெற்றவள் பிள்ளைக்குத் தாய்.

என்பன போல, எவ் வகையான ஆராய்ச்சியின் உதவியும் இன்றிச் சாதாரணமாக அறிந்து கூறும் ஒரு விஷயத்தை,

சங்கப் புலவராலும் தெய்வப் புலவர் எனப் போற்றப் பட்ட திரு வள்ளுவ நாயனார் அரிய வேத வுண்மைகளைத் திட்ப நுட்பம் திகழும் இரண்டு அடிகளான் ஆய குறட் பாக்களில் சுருங்கக்

கூறி விளங்க வைத்த தமது தமிழ் மறையில்,

மிகக் கஷ்டப் பட்டு "வடநூன் முடிபு ஆகிய இரு பெய ரொட்டுப் பண்புத் தொகையைக் கண்டு தெளிந்து அது கொண்டு ஆக்கப் பட்ட முதற் குறளால் விதந்து கூறி வெளிப் படுத்தி யருளினர் என்ருல்,

அவர் மிக்க ஏளனத்துக்கே இடமாயினுர் என்று கூற வேண்டியதாகும் அல்லவா?

ஆதலால் "ஆதி" என்னும் சொல் எமது புலவர் பெருமானுல் கையாளப் பட்டதன் காரணமும் அதன் பெட்புமே ஈண்டு முக்கியமாக ஆராய்தற் பாலன ஆம்.

அகரத்தை முதலாக வுடைய ஒலி வரி வடிவங்களும் பகவனை முதலாக வுடைய அண்டரண்ட சராசரங்களும் ஆதியை உடையன என,

பிரபஞ்சத் தோற்றத்தை விளக்கு முகத்தால் அதற்கு உரிமையுடைய அவ் ஆதி என்னும் சத்தியைத் தமது திருக் குறள் முதற் குறளால் போற்றுகின்ருர் புலவர் என்பதே உண்மையாகும்.

உலகம் பகவனை முதலாக உடையது எனக் கூறப் படினும்—வழங்கப் படினும் அது தவறு எனக் குறிப்பால் உணர்த்தி, உலக உற்பத்தி உரிமை ஆதிக்கே — ஆதி எனும் சத்திக்கே வழங்கப் படவேண்டும் என வற்புறுத்தி,

அவ் ஆதி எனும் பகத்தை உடையவன்—சத்தியை உடையவன் பகவன் எனப் படுகின்ருன் எனினும்,

இது கடவுள் வாழ்த்து என்னும் அத்தியாயம் ஆதலானும், உலகத் தோற்றத்துக்கு நேசா காரணமாகக் காணப் படுபவள்—ஆதியாக—முதலாகக் காணப் படுபவள் சத்தியே—அம்மையே—அன்னையே ஆதலானும்

அவ் அன்னையைப் பேணிப் போற்றித் துதித்தல் சிவர் யாவருக்கும் இன்றி யமையாக் கடனுகும் என் பதனை இம் முதற் குறளால் விளக்கி யருளினுர் புலவர் என அறிதற் பாற்று.

உற்பத்திக்கு இடமாகிய — தானமாகிய கருப் பையில் தாங்கி ஆச்கமுரச் செய்து பட முடியாப் பாடு பட்டு வெளி யேற்றிக் கண்டு களித்தலாகிய தத்துவம் அன்னைக்கே முதன்மையாக உள்ளது ஆதலால், அவ் ஆதி என்னும் அன்னையே — உலக மாதாவே உலக காரணி எனக் கூறி அவளையே முதலில் போற்றுகின்ருர் புலவர்.

பின் வரும் பிரமாணங்கள் சத்தியே அண்ட சராசரங்களை ஈன்றவள் — உலக காரணி என்பதை நன்று புலப் படுத்து கின்றன.

## திருமந்திரம்.

———

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே.

> மாளய அம்மாவாசையை முன்னிட்டு சென்ற வாரம் எமது பத்திரிகை வெளிவர வில்லை.

ஓங்காரி — பிரணவசொரூபி. ஆங்காரம் விசர்க்கத்தா லாய வியாபகத்தை உணர்த்திற்று. ரீங்காரம் — மகாரம். ஐவர் — பஞ்சீகரண பஞ்ச பூதங்கள்.

தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுபிர்வித்தாய்த் தந்த பதினுலும்
வானேர் தலைவ மனமுநற் புத்தியும்
தானே சிவகதி தன்மை யு மாமே.
(ஷை 4ம்- தந். சத்திபேதம்—திரிபுரைச்
[சக்கரம். மந். 29, 30.)

## தாயுமானவர் பாடல்.

———

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனுதீத நாயகி குணுதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமெடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளா்ரணி எனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே ! பின்னையுங் கன்னியென
[மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ்
[கங்கை புகழ்
வளமருவு தேவையரசே
வரைராஜனுக் கிருகண் மணியாயுதித்தமலை
வளர்காதலிப் பெணுமையே.
(ஷை மலைவளர் காதலி செ. 5)

## மீனுக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்.

———

சுற்றுநெடுநேமிச்சுவர்க்கிசைய வெட்டுச்
சுவாக்கானிறுத்திமேருத்
தூணென்றுநடுநட்டுவெளிமுகடுமூடியிரு
சுடர்விளக்கிட்டுமுற்ற
வெற்றுபுனலிற்கழுவுபுவனப்பழங்கலம்
எடுத்தேடுத்துப்புதுக்கூழ்
இன்னமுதமூஞ்சமைத்தன்னைநீபன்முறை
இழைத்திடவழித்தழித்தோர்
முற்றவெளியிற்றிரியுமத்தப்பெரும்பித்தன்
முன்னின்றுதொந்தமிடவும்
முனியாதுவைகலும்பேடுத்தடுக்கிப்பேரிய
முதண்டகூடமுடுஞ்
சிற்றில்விளையாடுமொருபச்சிளம்பெண்
[பிள்ளை
செங்கீரையாடியருளே
தென்னற்குமம்பொன்மலை மன்னற்கு
[மொருசெல்வி
செங்கீரையாடியருளே.

முகமதியூடெழுநகைநிலவாட
முடிச்சூழியமாட
முரியுருவக்கொடி நுதலிடுசுட்டி
முரிப்பொடசைந்தாட
இகல்விழிமகரமுமம்மகரம்பொரு
மிருமகரமுமாட
இடுநூபுரவடிபெயர்க்கிண்கி
ணெனுங்கிண்கிணியாடத்
துகிலொடுசோர்தருகொடி நுண்
மருங்குறுவண்டுதுவண்டாடத்
தொந்திசரிந்திடவுந்திகரந்தொளிர்

சூலுடைஆலிடைமயிறு)
அகிலசராசரநிகிலமோடாடிட
ஆடுகசெங்கீரை
அவனிதழைத்திடமவுலிபுனைந்தவள்
ஆடுகசெங்கீரை.

(ஷை செ. 15. 18)

["சூல் உடை ஆலிடை அகில சராசரம் நிகில மோடு ஆடிட" என்பது அகில சராசரங்களும் உலக மாதா ஆகிய சத்தியின் கருப் பையில் தங்கி ஆக்க முற்று வெளிப் படும் உண்மையை விளக்கி நிற்றல் காண்க.]

## அபிராமியந்தாதி.

"ஆத்தாளைஎங்கள்அபிராமவல்லியை
[அண்டமெலாம்
பூத்தாளை........................ ........."

கண்ணியதுன்புகழ்கற்பதுன்னுமங்
[கசிந்துபத்தி
பண்ணியதுன்னிருபாதாம்புயத்திற்
[பகலிரவா
நண்ணியதுன்னைநயந்தோரவையத்து
[நான்முன்செய்த
புண்ணியமேதென்னம்மே!புவியேழை
[யும் பூத்தவளே!

## திரு விளையாடற் புராணம்.

டங்கயற்கண்ணரியபரம்பரனுருவேதனக்
[குரியபடிவமாகி
இங்கயற்கண்கனுலகமேண்ணிறந்தசரா
[சரங்களீன்றுந்தாழாக்
கொங்கயற்கண்மலர்க்கூந்தற்குமரிபாண்
[டியன்மகள்போற்கோலங்கொண்ட
அங்கயற்கணம்மையிருபாதப்போதெப்
[போதுமகத்துள்வைப்பாம்.

(ஷை பாயிரம் செ. 8)

உலகத்தில் வழங்கப் படும் அகர முதலான ஒலி வரி வடிவங்களும், ஒரு முதல்வனை உடையது எனக் கூறப்படும் உலகமும் ஆகிய இவை இரண்டும் அஃதாவது சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சம் இரு வகைப் பிரபஞ்சமும் ஆதியை உடையன எனவும்,

இவற்றின் தோற்றத்திற்கு நேரிய முறையில் காரணமாக — முதலாகக் காணப் படுபவள் அவ் ஆதி என்னும் சத்தியே ஆதலால் நம்மை ஈன்ற அன்னையாகிய அவளைப் போற்றுவதே —பேணுவதே நமது முதற்கடன்— இன்றியமையாக் கடன் எனவும் இம் முதற் குறளால் வற்புறுத்தப் பட்டன ஆகும்.

அன்றி, சத்தி முன்னா? சிவம் முன்னா? என்னும் சர்ச்சை ஈண்டு எழவில்லை.

கடவுள் வாழ்த்து என்பதனால் முதலில் தொழுதற்கு — பேணப் படுதற்கு உரியவள் ஆதி என்னும் எமது அன்னை என்பதே ஈண்டுக் கூறப் பட்டது.

இவ் அன்னையைக் கொண்டு தான் அப்பனை அறிய வேண்டும் என்பதைக் குறிப்பாக — சமக்கினையாகக் கூறு முகத்தால், அவ் அன்னையைப் பேணு தலாகிய—தூலச் சிவையைப் பேணிக் காண்பதாகிய கல்வியால் அப்பனை அறிய வேண்டியதே முறை எனவும் அக் கல்வியால் ஆம் பயன் அவன் கழல் தொழுதலே எனவும் வற்புறுத் துபவராய், இவ் அத்தியாயத்து இரண்டாவது குறட்பாவை அருளிச் செய்தனர் ஆசிரியர் என அறிக.

அன்னையைப் பேணுவதே—தூலச் சிவையைப் பேணிக் காண்பதே — அதனைச் சத்தி பாகமாக்குவதே வாய் மையான கல்வி என்பது.

இவ் உண்மை மேல் இரண்டாவது குறட் பாவின் பொருள் உரைக்குங் கால் விளக்கிக் கூறப்படும்.

அன்னையே முதலில் போற்றப்பட வேண்டியவள்—பேணப்பட வேண்டி யவள் என்பது,

## ஔவையார் மூதுரை.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்
[வம்

(கொன்றைவேந்தன்)

என ஆதி சத்தியின் அவதாரம் எனப் போற்றப் படும் பாட்டியார் அருளிய வேத சூக்தத்தாலும் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

"ஓ! ஓ! வருக! வருக! பித்த வருக! உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் பெரும் புகழ் படைத்த பரிமேலழகர் முதலியோர் கண்ட உரையைக் கண்டிப்பான் முற்பட்ட நுமது மதித் திறமே திறம்."

"வள்ளுவர் அருளிய குறள் என்னும் தமிழ் மறையிலும் குற்றம் காண்பான் முயல்கின்றீர் போலும்! நும் இன்மை இருந்தவாறு என்னே!"

எனத் திரை மறைவாகவோ அல முன்னிலையிலோ கூறி ஒருவாறு அவதி யுறுவாரும் உளர் என்பது உண்மையே!

எனினும், தேவர் குறள் என்னும் செழுந் தமிழ் மறையிலுந் தான் அதன் உட்பொருளை விளக்குவான் வெளிவந்த உரைகளிலுந் தான் குற்றம் காண்பதையே நோக்கமாகக் கொண்ட இழிதகைமை யுடையார் மதிப் பொலிவின் பாற் பட்டதன்று எமது ஆராய்ச்சி.

மற்றோ, பொய்யில் புலவராகிய திருவள்ளுவரது தெய்வப் புலமையின் திறமையை—மேம் பாட்டை அஃதா வது அவர் திருவாய் மலர்ந்தாளிய திவ்ய மறையில் பலரும் கண்டும் காண முடியாத வாறு மறைந்து கிடக்கும் உண்மையை நம்மனோர் யாவரும் தடக்கை நெல்லி என விளக்க முறக் கண்டு அவர் தம் மதி நுட்பத்தை உணர்ந்து இறும்பூ தெய்தி உய்தி யடைய வேண்டும் என்னும் எமது பேரவாவே இவ் ஆராய்ச்சி ஆக்க முற்றதன் காரணம் ஆம் என்பதனைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இது நிற்க.

தேவர் தமது தமிழ் மறையில் முதற்கண் எடுத்துக் கொண்ட அத்தியாயம் கடவுர் வாழ்த்து என்பது.

எல்லாச் சமயத்தவரும் தந்தம் சமயக் கொள்கைகளுக்கு ஏற்பக் கடவுள் என்னும் பொது மொழியைக்

கூறுகின்றார் எனினும், பல வேறு சொற்களால் அக் கடவுள் என்னும் தத்துவத்தை உருவகப் படுத்திக் கற்பனையால் பலப் பலவாறு பலப்பல திரு நாமங்களால் கூறி மகிழ்கின்றனர் என்பது கண்கூடு.

நாயனாரோ எனின், வாய்மையை அறிந்தவர் ஆதலால், அவ்வாறு கூறத் துணியாது—கூற மனம் பொருந்தாதவராய்,

அகல முதல எழுத்து எல்லாம் — அகரத்தை முதலாக வுடைய ஒலி வரி வடிவங்கள் என்னும் எழுத்துக்களும்; பகவன் முதற்றே உலகு — பகவனை (கடவுளை) முதலாக வுடைய அண்ட ரண்ட சரா சரங்களும், ஆதி — ஆதியை உடையன;

அஃதாவது ஆதி என்னும் தத்துவத்தி னின்றும் வெளி யேறின — பூத்தன — வியாபகம் பெற்றன எனக் கூறி;

அவ்வாறு கூறு முகத்தால் அவ் "ஆதி" என்னும் சத்தியைப் போற்றுகின்றார். [ஏகாரம் அசை நிலை.]

இதுவே இவர் தம் கண்ணியம் வாய்ந்த திருவுள்ளக் கிடக்கை என அறிதற் பாற்று.

இதனால் பெறப் படுவது யாது?

அகரத்தை முதலாக வுடைய ஒலி வரி வடிவங்களின் பீஜமாகிய வித்தையும், அண்டரண்ட சரா சரங்களின் (உலகு) பீஜமாகிய வித்தையும் தன் அகத்து—தன் உள்ளே வகித்து வெளியேற்றியது—தோன்றுமாறு செய்தது —பூத்து மலர்ந்து மணக்கச் செய்தது

"ஆதி"

என்னும் தத்துவம் (பேராற்றல்) எனப் பொருள் படுமாறு தமது தெய்வப் புலமையால் தேவர் யாத்தனர் சூத்திரம் என்பது.

கடவுள் வாழ்த்து என்னும் அத்தியாயம் ஆதலால் அவ் ஆதி என்னும் தத்துவத்தை வாழ்த்துகின்றார் எனப் பொருள் கோடலே முறைமையும் சாலப் பொருத்தமும் ஆம் என அறிதற் பாற்று.

பகவன் என்னும் சொல்லுக்குக் கடவுள் என்னும் பொருள் கூறப் படுதலால், கடவுளுக்கு மேலான — கடவுளினும் மேம்பாடுடைய பொருள் உண்டோ? எனின்,

இரண்டு பொருள்களைச் சுட்டி — இரண்டு பொருள்களைக் குறிப்பிட்டு இவற்றுள் மேல் கீழ் என்னும் ஆற்றல் நிறை பேதங்களைப் பற்றிய ஆராய்ச்சியை நிகழ்த்தி முடிபு காண்பான் முயன்று அறுதியிடுவது எமது புலவர் உள்ளக் கிடக்கை யன்று.

மற்றோ, கடவுள் வாழ்த்துக் கூறு முகத்தால் தோற்ற முடைய சராசரங்களின் காரண பூதமான ஆதி என்னும் மாயா தத்துவத்தை அஃதாவது உலகத்தையும் நாத தத்துவத்தால் ஆய ஒலி வரி வடிவங்களையும் தன்னுள் அடக்கி வெளிப்படுத்திய "ஆதி" என்னும் சத்தியாகிய தாயை — அன்னையை — உலக மாதாவை முதன்மையாக வாழ்த்தி வழிபடுதலே முறையும் இன்றியாக் கடனும் ஆம் எனக் கண்டவர் புலவர் பெருமான் ஆதலால் தோற்றம் என்னும் விபாகத்துக்கு ஆதியாகிய அவளையே வாழ்த்துகின்றார் என அறிதற்பாற்றும்.

மாயா சத்தியாகிய இவ் ஆதி சத்தியே மோட்சத்தை அடைவிப்பவள் — மதிக்கப் படத் தக்கவள் — பூஜிக்கப் படத் தக்கவள் என்றனர் பெரியார்.

"மாம் அபதி கிதி மாயா"

[மாயா சத்தியே மோட்ச லட்சுமியை அடைவிப்பவள்.]

"மானேதும் யோக்கியம் மாயா"

[மாயையே மதிக்கத் தக்கவள் — பூஜிக்கப் படத் தக்கவள்]

என ஆன்றோர் கூறியதும் அறிக.

அன்னையாகிய இவளைப் பூஜிக்காமல் — பேணிக் காணாமல் — உறவு படுத்தாமல் தூலச் சிலையாய் — முன்னிலையாய் விளங்கும் இவளை அலட்சியம் செய்து பிரபஞ்ச சாகரத்தி னின்று ஒருவன் கரை யேறுவது — நித்தியத்துவம் பெறுவது முடியாத காரியமே ஆகும்.

இவ் அரிய பெரிய உண்மையையே தமது தமிழ் வேத நூலின் முதலாம் சூத்திரத்தால் உய்த்துணர வைத்தனர் எமது பொய்யில் புலவர் என அறிக.

"ஆம்! ஆம்! தடு மாற்றங்களும் குழறு படைகளும் மலிந்த நம் ஆராய்ச்சியை அதி வேகமாகச் செலுத்தாது சற்று நிதானத்தோடு இயங்குக. ஆதி என்னும் சத்தியி னின்று ஒலி வரி வடிவங்களும் உலகமும் வெளிப்பட்டன என்று ஓலமிடும் நுமது ஆராய்ச்சி புரையானது,

"பகவன் முதற்றே யுலகு"

என்னும் வாக்கியத்தால் பயனற்றதும் முன்பின் முரண் பாடுடையதுமாகி அவலமாயிற்றே" எனின், அற்றன்று.

உலகியலில் ஒருவனை இன்னான் மகன் என்று அவன் தந்தையைக் குறிப்பிட்டுக் கூறுவதே வழக்கு அல்லவா?

அஃதே போல்

ஈண்டும், உலகு பகவனை முதலாக உடைத்து எனக் கூறினார் புலவர் என அறிக.

ஆதி என்னும் பகத்தை உடையவன் பகவன் என்பது வெள்ளிடை ஆதலால் — பகவன் என்னும் சொல் ஆண் தத்துவத்தையே குறிக்கின்றது ஆதலால், அப் பகவன் என்னும் ஆணொடு சேர்ந்து அண்டரண்ட சரா சரங்களையும் கருவில் தாங்கிப் பக்குவப் படுத்தி வெளி யேற்றிய தாயைக் குறிப்பிடுவது முறைமையும் உலகியலுக்கு ஒப்பிய வழக்குமன்று என அறிந்த புலவர் பெருமான்,

உலகு பகவனை முதலாக உடைத்து

எனக் கூறியதோடு அமையாது, தாயின்றி — தாயின் கருணையின்றி அத் தாயானவள் தன் அமுத கலசங்

களைப் பிடித்து உண்டு உண்டு ஆக்க முறும் மகவைப் பரிந்து நோக்கி

"மகனே! என் கண் மணியே! என் அருமைச் சுதனே! 'இதோ! நின் தகப்பன். இவனே நின் அப்பன்"

என்று தன்னை அணைந்து சுகித்த வனைச் சுட்டிக் காட்டிப் பழக்கி னாலன்றி மகனானவன் தகப்பனாகிய பகவனை அறிய முடியாது என்பது பட்டாங்கு ஆதலால்;

தோற்றத்துக்கு நேரான காரணமா யிருக்கும் தாயை — தாய் என்னும் ஆதியை வாழ்த்தினார் எனக் காண்க.

இதனால் எமது ஆராய்ச்சி முன் னொடு பின் முரண் படுவதாகாமை கண்டு கொள்க.

## பட்டினத்தடிகள் பாடல்

———

"..............................மெய் யருளாம்
தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி"

என்னும் திருவாக்கும் எமது ஆராய்ச்சியின் பெட்பை நன்று வலியுறுத் துதல் கண்க.

நம்மை ஈன்ற அன்னையாகிய ஆதி என்னும் சத்தியே நம்மால் பேணப் படுதலால் அருள் வடிவாய் நின்று அப்பனைக் காட்டி நமக்கு நித்தியத் தவம் அளிப்பவள்.

"தாயுடன் சென்று" என்பது முன்னிலையாய் விளங்கும் தூலச் சிவையைப் பூசித்தலாகிய — பேணிக் காணுதலாகிய ஐந்தெழுத் தருச் சனையை உணர்த்தி நின்றது என அறிக.

உலகியலுக்கு ஒப்பியவாறே பாரமார்த்திகத்திலும் தாயைப் போற்ற வேண்டும் என்பதும், தாயைப்போற்றி அவளால் வளர்க்கப்பட்டு அவள் கருணையைப் பூரணமாகப் பெற்று உய்தி யடைதலே இன்றியமையாக் கடனும் அறத்தாறுமாம் என்பதும் இதனால் நன்று பெறப்படுதல் கண்டு கொள்க.

காணப்பட்ட உலகத்தால் காணப் படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின்

"பகவன் முதற்றே"

என உலகின் மேல் வைத்துக் கூறி, உலகியலுக்கு ஒப்பியவாறு விஷம மாகவே

"ஆதி" "பகவன்"

என்னும் இரு சொற்களையும் ஒரு சொல்லே என அவ் உலகியலுக்கு ஒப்பிய படிப்பாளிகள் கண்டு பிரமை யடையும் படியும், உண்மையை நாடும் ஆற்றலுடையார் அதனைக் குருவருளால் அறிந்து உய்தி யடையும் படியும் இச் சூக்தத்தை அமைத்து வைத்தனர் புலவர் எனவும் அறிதற் பாற்று.

மேல், எழுத்துக்களுக் கெல்லாம் அகரம் முதல் என்பதன் உண்மையும் அவை ஆதியை உடையன — ஆதியி னின்றும் விரிந்தன என்பதும் சிறிது கூறப்படும்.

மகர மெய்யே ஒலி பீடம். இஃது உள்ளுக்கு உள்ளாகச் சுழன்று ஒலியாமல் ஒலிப்பது; அசையாமல் அசைவது. இதனை அசைவு அற்ற இடம் என்ப. இதுவே வியாப்பியம் எனப் படுவது.

இவ்விடத்து அகரம் உலாவு கின்றது. அகரம் இல்லாமல் இடம் அருள முடியாது. ஏனெனில், அகரம் தோன்று முனம் இடம் தோன்றாது. மகரமும் அகரமும், இடமும் பொரு ளுமாய் உள்ளன. இடமில்லாமல் பொருள் இல்லை. பொருள் இல்லாமல் இடம் இல்லை. மெய் யில்லாமல் உயிரில்லை. உயிரில்லாமல் மெய் இல்லை.

வாய் திறத்தலே அகரம். அகர ஒலி இன்றேல் மற்றைய ஒலிகள் தோன்றாவாம். "ம" என அகரம் தோன்றி மற்றைய ஒலிகள் தோன்றி யன. அகிலம் தோன்றியதும் இவ் வாறே.

இவ் அகரத்தினாலேயே மகர மாகிய ஒலி பீடத்துக் கௌணமாய் ஒலிக்கும் ஒலிகள் அனைத்தும் விரிந்தன ஆகும்.

மகர ஒலியே இகர ஒலியும் உடை யது. "ம்" (இம்) என்ற போதே இகரம் தொனிக்கின்றது. மகர மெய் ஒலி ஈற்றில் உகரம் தொக்கு விளங்கும்.

மகரமே பிரணவம். அஃது "ஓ" என ஒலித்து "ம்" என ஒடுங்கும்.

இவ்வாறே மகரத்தினிடத்து அ, இ, உ, எ, ஒ என்பன கௌணமாகத் தொனித்தல் நுண்ணிதின் உணரப் படும். ஏனைய ஒலிகளும் — உயிர்களும் மெய்களும் இவ்வாறே ஆக்க முற்று விரிந்தன ஆகும்.

மகர மெய்யாகிய இடத்தோடு பிரி படாது பொருள் என விளங்கும் அகரத்தினால் ஒலி வரி வடிவங்கள் அனைத்தும் வெளிப் படுதல் பற்றியே

"அகர முதல எழுத் தெல்லாம்"

என்று கூறப் பட்டது.

அகரமும் அகர முதலிய எழுத்துக் களும் ஆதியை உடையதாமாறு — அதினின்றும் விரிந்தவாறு யாங்ஙனம்? எனின், சிறிது கூறுதும்:—

"மா" என்பது விரிந்த தூலம் — தூல உலகம். "ம" என்பது இயக்க நிறை சமம் பெற்ற இடம்; வியாப்பிய அந்தமும் வியாபக ஆதியும் சேர்ந்த இடம் — காணப்படும் இடம்; "அ" எனக் குறுகி அஃதாவது "மா" என விரிந்த வியாபகம் "ம" எனக் குறுகித் தன் ஆதி மாத்திரையைப் பெற்ற இடம்.

அஃதாவது மகர ஒற்றாகிய "ம்" என்ற இடத்தில் கௌணமாக இயங் கிக் கொண்டிருக்கும் பொருளானது (அகரம்); காயம் என்னும் அக்கினி யின் ஏற்ற பெற்றி நிறையால் "அ" என (ம) என நீண்டது.

நீண்டு அசைவற நின்றது. வியாபகம் பெற்றும் வினை வளராது இருந்தது. போதிய சத்து இன்மையே — சத்தி இன்மையே காரணம் என்க.

ஆதலால் "ம" எனும் அகரத்தோடு கூடிய மகரம் "மா" என விசர்க்கம் பெற்றது. அகரக் குறில் "ஆ" என நீண்டது எதனால்? அக்கினியோடு இணைந்து நிறைகொண்ட வாயு என்னும் சத்தியால் என்க. சத்தியே நீண்டது. இதனால் தோற்றத்துக்குச் சத்தியே ஆதி என்பது காண்க.

இச் சத்தியே மகரம். இடமும் பொருளும் இதுவே. இடமும் பொருளும் பிரியாமல் பிரிந்து காட்டுவன ஆகும். இரண்டும் ஒன்றே.

"ஆதி" என்னும் சத்தியினின்றே அகரா - அகர முதல எழுத்தெல்லாம் ஆக்க முற்றன என்க.

கந்தப் புராணம்

——

"அகரமதாதியானஎழுத்தெலாமாகிப்பின்
[னர்
மகாரமானமேலோன்......................"
(ஷிசிங்கமுகாசுரன்வதைப்படலம்)

என ஞானசத்தி வடிவினராகிய முருகவேள் போற்றப் பட்டதன் உண்மையும் இதுவே என உய்த்துணர்ந்து கொள்க.

இவ் வாற்றால், அகரமும் அகர முதல எழுத்துக்களும் "ஆதி"யை உடையன — "ஆதி" என்னும் சத்தியினின்று ஆக்க முற்றன — விரிந்தன என்னும் தேவர் திருவாக்கின் மறைபொருளை — உண்மையை ஓர்ந்து கொள்க.

இனி, பகவனே முதலாக உடைய உலகம் ஆதியை உடையது — உலகத்துக்கு முதல் எனப்பட்ட பகவன் ஆதியை உடையவன் என்பது பற்றிச் சிறிது கூறுதும்: —

மகரமே பிரணவம். ஓம் என்னும் பிரணவம் மகர மெய்யின்றித் தனித்து நிற்காது. ஊன்றும் இடம் இல்லாமல் பொருள் இருக்குமா? பிரணவமாகிய ஓங்காரம் ஓ என ஒலித்து "ம்" என ஊன்றும். இதுவே சத்தி. இது பற்றியே,

திருமந்திரம்.

——

ஓங்காரி யென்பாளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகவே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்கார தத்துள்ளே யினிதிருந் தாளே.
(ஷி தந்.)

என்றனர் அண்ணல் திருமூலர்.

தோன்றிய இடத்திலேயே ஒடுக்கமாதலால் மகரத்தினின்று ஆக்க முற்ற பிரணவம் அதன்கண் ஒடுக்கம் பெறுகின்றது. ஆதலால் மகரமே குண்டலியாகும். ஒலி என்பது ஆதியில் மஹா மந்திரமாகிய மகர ஒத்தே — ஒற்றே ("ம்") ஆகும். இதுவே ஆதி எனப் படுவது.

இதனைத் தான் மௌன எழுத்து; மோன வித்தை, குண்டலி இயக்கம்; உள் இயக்கம் என்பது. உள்ளீடாகக் கௌணமாய் ஒலிக்கும் இதனையே "அந்தணர்மறை" என்றனர் பெரியார். நாத அந்தத்தை அணவிய தத்துவப் பெரியாராகிய அந்தணரே இதனை அனுபவமாக அறிய வல்லராவர். இது பற்றியே இஃது அந்தணர் மறை எனப்பட்டது. அந்தணரால் அறியப் படும் மறை என்பது பொருளாகும்.

இத்தகைய மகாரப் பெட்பை அறிந்தவரே எழுத்துக்களின் பிறப்பையும் இலக்கணத்தையும் பூரணமாக அறிய வல்லவரும் ஆவர்.

உலக மாதாவாகிய இவ் "ஆதி" என்னும் சத்தியையே

"நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே"

எனவும்,

"நாதா வடிவாகிய மஹா மந்த்ரரூபியே"

எனவும் போற்றினர் அறிஞர் பெருந்தகையாகிய தாயுமான சுவாமிகள்,

இந்த (ம்)மகாரம் என்னும் "ஆதி"யினின்றே அகரம் "ம" என உதித்தது. "அம்" என லயம் பெற்று "மா" என உதித்தது.

அம்மா என்றது. "அம்" என்ற இடத்து ஈற்றில் இகரம் இருக்கின்றது. இதனால் அ, இ என்னும் சத்தம் உளதாயிற்று. இவை (அ,இ) தந்தை தாயாரைக் குறிக்கின்றன.

இவை "ம்" என்னும் சத்தியினின்று ஆக்க முற்றமையாற்றான் "ஆயி" (அ + இ) என்னும் சொல் ஈன்றோர்க்கு — முக்கியமாக அன்னைக்கு வழங்குவதாயிற்று.

"எவ்வமில் ஆயி மோய் தாய் ஈன்றவள் நா
மம் என்ப"

என்பது நிகண்டு நூல். அ — தந்தை. இ — தாய்.

இகரமே உகரம். அதுவே உலகம். உகரம் இல்லாமல் உலகம் நடவாது. உகரமே சத்தி — சலம். தேயு சொரூபம் அதில் ஆக்கமுற்றது. தேயு சொரூபம் சிவம். அப்புவும் தேயுவுமே யாவற்றுக்கும் மையம் — நடு மையம் — கமல். உகரமே காரியத்திற் காரியமான தூலம் — தூல உலகம் — தூலச் சிவை.

இவ்வாற்றால், ஓங்காரியாகிய "ஆதி" என்னும் சத்தியே — குண்டலி சத்தியே — வியாபகம் பெற்று — விரிந்து உலகமாயினள் — உலகத்துக்கு முதலாகினள் — உலகமாதா வாயினள் என்பது கண்டு கொள்க.

மேல், உலகத்துக்கு முதல் எனப் பட்ட பகவன் ஆதியை உடையவன் என்பது பற்றிச் சிறிது கூறுதும்: —

பகத்தை உடைவவன் பகவன். பகம் என்பதே ஆதி. இதுவே ஆவுடை — ஆவுடையார் — பீடம். பகவன் என்பதே இலிங்கம். ஆவுடையும் இலிங்கமும் சேர்ந்ததே மகரம் ("ம்") என்பது.

திருமந்திரம்.

——

மாதுநல் லாளு மணாள னிருந்திடப்
பாதி நல் லாளும் பகவரு மானது
சோதி நல் லாளைத் துணைப்பெய்ய வல்லி
[ரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே.
(ஷி 4-ம் தந். சத்திபேதம்—ஆதாரவா
[தேயம் மந் 3)

என எம் அண்ணல் அருளியதும் அறிக.

இம் மகாரப் பெட்பைக் குருவருளால் கண்டு சகசநிட்டை கைவரப்

பெறுதலே தம்முள்ளே சிவ லிங்கம் கண்டு பூசனை புரிதல் என்பது.

உலகத் தோற்றத்துக்கு இன்றியமையாச் சத்தியாகிய "ஆதி" யோடு சேர்ந்து — ஆதி சத்தியோடு சையோகித்த — இரண்டறக் குழைந்து பஞ்சீகரணித்து — விந்து நாதம் எனக் குழைந்து அச் சத்தியுள் மறைந்து மறையாய் — மறை வடிவாய் இருந்து அச் சத்தியினின்று உலகத்தை வெளிப் படுத்தியவன் பகவன் என்க.

## மஹாபாரதம்.

———

"லிங்கம் ஸர்வமீசாநம் ஸ்திரீலிங்கம் பகவத்யுமா"

## யஜுர் வேத ருத்ர ஹ்ருதய உபநிஷத்.

———

ருத்ராத் ப்ரவர்த்ததே பீஜம் பீஜயோநிர் ஜநார்த்தந: |
கார்யம் விஷ்ணு: க்ரியா ப்ரஹ்மா காரணம் து மஹேச்வர: ||

(இ—ள்) பிரபஞ்ச சிருஷ்டியாகிய கிரியையை நடாத்துதற்குப் பிரம தேவனைத் தரும் காரணத்தினாலே உருத்திர மூர்த்தி பீஜம் எனவும், அந்த பீஜத்துக்கு யோநி ஜனார்த்தனனாகிய விஷ்ணு எனவும் சொல்லப்படுகின்றார்கள் என்பது.

## இலிங்க புராணம்

———

'மலைமகள் கொழுநன் பீசமீ பீசமற்றியான் யோநி தன்பீசம்
உலகெலா முன்னந் தோற்றுவிப் பதற்கென் யோநியில்வைத்தனன்
.......................................'

சத்தியே சிவம். சிவமே சத்தி. ஆண் பெண் என்பனவும் பொருளால் ஒன்றே. நிறை பேதத்தால் ஒன்றே ஆண் எனவும் பெண் எனவும் கூறப்படுகின்றது. நாத விந்து — விந்து நாதம் சத்தி சிவம் என்பன ஒன்றே ஆம்.

அஃதாவது விந்து என்பதே ஓர் அவசரத்தில் ஆண் எனவும் மற்றோர் அவசரத்தில் பெண் எனவும் கூறப்படும் என்பது. முன் இது பின் இது என முற் பிற்பாடு கூற ஒண்ணாது.

பகவன் விந்து நாத வடிவினன். கடவுள் (கடை + உள்) விந்து நாத வடிவமே ஆர். உலகிடலைக் காட்டுதற்கே பகவனை — கடவுளை முதலாக உடையது உலகம் என்றனர் தேவர்.

கடவுள் [redacted]ன்னும் சொல் காரண காரியத்தை உள்ளே வகித்துச் சத்தி சிவம் என இயைந்து "இயவுள்" எனப்படும்.

உலக வியவகார முறையில் கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தார் எனக் கூறப்படினும், அக் கடவுளும் "ஆதி" யோடு இயைந்தவர் ஆதலால் அவ் "ஆதி" யே ஏற்ற பெற்றி நிறையுடையதாய்த் தோற்றம் பெற்றது — விரிந்தது எனக் கூறற் பாற்று.

நிறை கொண்ட இயக்கம் எனும் சத்தின்றித் தோற்றம் சித்திக்காது. இயக்கம் எனும் நாதமே — ஒலியே தடித்துத் தூலித்தது என்க.

எல்லாம் நாத விந்து சொரூபமே. நாத விந்து என்பன வற்றிற்கு ஆதி அந்தம் இல்லை. தாய் தந்தையரும் இல்லை.

சிவம் என்னும் பொருள் ஆதி என்னும் சத்தியோடு சேர்ந்தாலன்றி — சிவமும் சத்தியும் இரண்டறக் கூடி நிற்கும் தத்துவத்தாலன்றி எத் தொழிலும் நடப்பதில்லை.

## ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அருளிய சௌந்தரிய லஹரி.

———

'சிவ: சக்த்யா யுக்த: யதி
சக்த: ப்ரபவிதும்
......................................."

"சிவமெனும் பொருள் ஆதிசத்தியொடு
சேரின எத்தொழிலும் வல்லதாம்
......................................."

## திருவிளையாடற் புராணம்.

———

"சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலை.........................."

என ஆன்றோர் கூறியதூஉம் அறிக. இவற்றால் சத்தியே வியாபகத்திற்கு முதன்மையுடையதென்பது வெள்ளிடை ஆம்.

இது பற்றியே வியவகார நிலைக்கு ஆதியே முதல் என்பதனை விளக்கிக் காட்டி அவ் ஆதி என்னும் உலகமாதாவாகிய சத்தியையே வாழ்த்தினார் புலவர்.

உலகத் தோற்றத்தைக் கூற எழுந்ததே இம் முதற் குறள். ஆதலால் ஒடுக்கத்தைப் பற்றிய விசாரம் ஈண்டு இல்லை.

பகவன் உலகிற்கு முதல் எனக் கூறப்படுவது உபசார வழக்கே என்பதனை எடுத்துக் காட்டுதற்கே

"பகவன் முதற்றே யுலகு"

என உலகியலுக்கு ஒப்பக் கூறி, இருவகைப் பிரபஞ்சமும் தோற்றம் பெறுவது சத்தியினாற்றான் என்னும் வேத உண்மையை வெளிப் படுத்தியருளினார் ஆசிரியர்.

[தகப்பன் பெயரைக் கூறுவதே உலகியல். தாய் பெயரைக் கூறுவது வழக்கன்று. எனினும் ஈன்றவள் தாயே. அவளே முதலில் போற்றப்பட வேண்டியவள்.]

சொல்லும் பொருளுமாய் விளங்கும் இருவகைப் பிரபஞ்சமும் ஆதியினின்றும் தோற்றம் பெற்றன ஆதலால் அவளைப் போற்றி — பேணி அவள் கருணையைப் பெறுதலே வாய்மையான கடவுள் வழிபாடு எனவும் வாய்மையான கல்வி எனவும் இச் சூத்தத்தால் உய்த்துணர வைத்து, அத்தகைய வழிபாடு என்னும் கல்வியால் ஆம் பயன் அவள் அருளால் வேத வடிவாகிய அப்பன் திருவடி கண்டு பேரின்ப லாபம் பெறுதலே என இரண்டாவது சூத்தத்தால் கூறுகின்றனர் புலவர் என அறிதற் பாற்று.

மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் என்னும் தமிழ் வேதத்தின் முதலாம் சூத்தமாகிய "அகரமுதல ...........' என்னும் குறட்பாவின் உண்மைப் பொருள் ஒருவாறு உணரத் தகும்.

சுபம்.

Imprimerie "VITTAGAM" -- Pondichèry. Le Directeur-Gérant. R. Nagarattinam.

பிணை—மான் போன்ற கண். இறை-கை. தாவ-தாவும் படி. உயிரோவிய—என்னுயிர் நீங்கும்படி. எண்டிசையுந் தாவிய மடப்பிணைக்கு ஓவிய வுயிரை நீ கொடுத்தால் இன்று உலகை என் செய்யாது என்பதுந் தோன்றிற்று. இறைதாவ — சிறிதுதாவும் படி. இது மாரிசன் சரிதம் போலும். பிணை — மான்.

சொற்பேறு பெற்ற தனவா யெனுந்துரை ராயனரு
ணற்பேறு தேவை ரகுநாயகன் செம்பி நாட்டிலுயிர்
வெற்பேற விட்டுத் துணையார் கண்மேணி விரைந்தொளித்தா
லற்பேறு நெஞ்ச மினியென் படாதுபெண் ணாரமுதே.

வெற்பு — மலைபோலு முலை. உயிரை வெற்பிலே ஏற விட்டு என்க. கண்மேணி — கண்ணுகிய மான். இனி மலையிலேறவிட்டுக் கண்மேணியை ஒளித்தாய் என்பதுந் தோன்றிற்று. கண்மேணி—நென்பேணி.

தோங்கார் முகிழ்முலைக் கொம்பரன் னீரண்ட கோளமெல்லா
நீங்காத மெய்ப்புக ழான்ரகு நாத னெடுங்கரந்தைப்
பாங்கார் கொடிக்கய ருங்காணீன் றீர்தண் பயோதரத்தே
நீங்காந் தலையிடி லாங்காண் மதிகுலத் தென்னவரே.

பயோதரம்—முலை; மேகம். இனி கொடிக்கயலைத் தாங்கினீர் மேகத்திற்குத்தலையிட்டால் நீர் தென்னவரே என்பதுந் தோன்றிற்று.

தூதே நடந்த கவிகுல மாமணி தோன்றுகொடி
மீதே யுயர்த்த ரகுநாய கன்றமிழ் வீரையிலிப்
போதே வனத்தி னிறைகங்கை மேவப் புரிந்ததனுன்
மாதே யுனையுஞ் சொலலாம் ரவிகுல மன்னனென்றே.

வனத்தின் நிறைகம் — நீரால் நிறைந்த இந்திரியம். கண். கைமேவ—கை பொருந்த. இனிக் காட்டின்கண் நிறைந்த கங்கை வர எனவும் பொருள் கொள்க. ரவிகுல மன்னன்—பகிரதன்.

செய்க்கஞ் சனந்தம் பயில்செம்பி நாடன் சினவடிவேற்
பொய்க்கஞ் சனந்தப் பொருரகு நாதன் பொலங்கிரிமேன்
மெய்க்கஞ் சனந்தரு முன்னே யதிசய மெல்லியநின்
கைக்கஞ் சனந்தங் கவின்கெனக் கேதனங் கண்ணுற்றதே.

மெய்க்கு அஞ்சனந்தரும் — உண்மை காண்பதற்கு மைதரும். ஏனெனில், உன்கைக்கு அஞ்சனம் வர முன்னமே தனங் காணப்பட்டது ஆதலால்.

கண்டே யெனுஞ்செங் கனிமொழி யீர்சிலைக் கார்விசயன்
றிண்டேர் கடவும் ரகுநாதன் வெற்பிற் செந்தாமரைமேல்
கொண்டே குவளை யிருத்தல் கண்டேனக் குவளையின்மேல்
வண்டேய் கமலமுங் கண்டே னிதுவென்ன மாயங்களே.

தாமரை—கமல வரும்பு போன்ற முகம்.மேற் கொள்ளுதல்—இவ்வருதல். குவளை--குவளை மலர் போன்றகண். வண்டேய் கமலம்-வளையல் பொருந்திய கமலம் போன்ற கை. தாமரையின் மேற் குவளை கண்டேன். வளையின் மேற்றாமரை கண்டேன். இது என்ன மாயம் என்பது தோன்றிற்று.

நீதநந் தாதன தளவாய் குமார னெடுங்கருட
கேதனங் கொண்ட ரகுநாதன் றேவைக் கிளிர்ந்தகந்த
மாதனங் கண்டுவந் தேன்றனுக் கோடி வளைகடலெப்
போதனம் போனடையீர் கண்டு நானுடல் பூரிப்பதே.

நீதம்--நீதி. கந்தமாதனம்--மணம் பொருந்தி பெரிய தனம். தனுக் கோடி வளைகடல் -- வில்லுப் போலும் புருவவொழுங்கு விளங்க கடல் போலுங்கண். கந்த மாதனங் கண்டு மகிழ்ந்தேன். தனுக் கோடியாகிய வளை கடலை எப்போது நான் கண்டு மகிழ்வது என்பதுந் தோன்றிற்று.

ஊனிடமான முனைவேற் பகைதிசைத் தோடி நெடுங்
கானிட மாகவென் றோன்ரகு நாயகன் கந்தகிரித்
தேனிட யாமொழி யீர்கணப் போதிற் செறிவிலங்கை
மானிட மாக்கிவிட் டீருமைப் போலெவர் வல்லவரே.

செறிவில் அம்கை—செறிந்த ஒலியையுடைய அழகிய கை. மான்—போன்ற கண். இனி விலங்கை மானிட மாக்கிவிட்டீர். என்பதுந் தோன்றிற்று.

கானேர் பொருப்பு மருவியும் போற்கமழ் முல்லையந்தார்
தானே விளங்கும் புயரகு நாதன் றமிழ்க் கரந்தைத்
தேனே வளவ னிலைமைவிட் டேசென்று தென்பொதிய
மானே ரடைத லன்றோ புண்டரீக மணிக்கொடியே.

பொருப்புப் போலும் புயம். அருவி போலும் முலைத் தார். வளவல் நிலை--வளவிய சூதாடு கருவி போன்ற முலை நிலைமை. வல்-சூதாடு கருவி வளவன் நிலை--- சோழ னிலைமை. தென் பொதி அமான்--அழகு பொருந்திய அந்தமான் போலுங் கண். தென்பொதிய மான்-- பாண்டியன்.

சீலத்து மிக்க தளவாயளித்தருள் செல்வனெரு
காலத்தும் பொய்யுரை யான்ரகு நாதன் கரந்தைநகர்
போலத் துலங்கும் பொலங்குழை யீர்சென்று பூம்புனரோ
யாலத்து மாந்தளிர் கண்டோ மிதுவென்ன வற்புதமே.

ஆலம்--நஞ்சு போன்ற கண். மாந்தளிர்-- மாந்தளிர் போன்ற கை. ஆலமரத்திலே மாந்தளிர் கண்டோ மென் பதுந் தோன்றிற்று.

(தொடரும்)

# திருவாசக உண்மை.

யாழ்ப்பாணம், தென்கோவை தமிழ்ப்பண்டிதர்

**ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை**

( வித்தகம் பேராசிரியர் )

அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவியருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 0—2—9 அணா தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**நந்தி வெளியீட்டு மன்றம்**

**புதுவை.**

## TOWARDS TRANSCENDENCE.

Vedanta Kesari Madras, Writes:—

"The book speaks of undiscovered possibilities hidden in the deeper reaches of the mind which could be brought into the conscious plane by a process of Transcendance of the various lower planes by which man become the superman possessed of great psychic powers, and later emerges with a still higher order of consciousness, as a Divine Personality."

Price As. 12.

**Nandhi Publishing House**

PONDICHERRY.

Vient de paraitre, à

## L'ARGUS

Doyen des Bureaux d'extraits de Presse de France et de l' Etranger –, la nouvelle Edition, la septième de:

**"NOMENCLATURE des Publications en LANGUE FRANCAISE du monde entier"**

C'est un volume très documenté, genre de travail unique, classé méthodiquement, contenant plus de 15000 noms de Périodiques différents en langue française dont chacun d'eux possèdera un exemplaire.

இனம்!

இனம்!!

**சுத்த சாதகம்**

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் அல்லது 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஜல வைத்தியம்**

வேண்டுவோர் 6 அணா தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம். புதுவை.

Imprimerie "VITTAGAM" — Pondichéry.

Le Directeur-Gérant. R. Nagarattinam.